# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 57 /பேரூ/2025**
**நாள் : 09.04.2026**

U. சிவராமகிருஷ்ணன்,
பெரியகுளம்,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஜி கல்லுப்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. U. சிவராமகிருஷ்ணன் என்பவரது 11.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2025 அன்று பெறப்பட்டு, 57/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஜி கல்லுப்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. U. சிவராமகிருஷ்ணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 11.01.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள 28.12.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“கெங்குவார்பட்டி பேரூராட்சியானது தேனி மாவட்டத்தில் பாரம்பரியமிக்க மாண்புகளை கொண்டதும், மலைகளின் இளவரசியான கொடைக்கானல் மலையின் நுழைவாயில் பகுதியில் அமைந்ததாகும். இயற்கை எழில் சூழ்ந்த இந்த பேரூராட்சியில் கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 வரை பொறுப்பு செயல் அலுவலராக இருந்து வந்த ஆர். குணாளன் என்பவர் தான் இருந்த 21 நாட்களில் கெங்குவார்பட்டி பேரூராட்சி நிருவாகத்தில் முறைகேடாகவும், தனி நபர்கள் மீது 21 (இருபத்தி ஒன்று) காசோலை வழங்கியும் (எண்கள் அதாவது 928230 முதல் 928251 அஜந்தாபடி) தரமற்ற மோட்டார் சாமான்கள், குடிநீர் பராமரிப்பு சாமான்கள், தெருவிளக்கு உதிரிச் சாமான்கள், நிருவாக சில்லரை செலவுகள் என பல இலட்சம் ரூபாயை கையாடல் செய்துள்ளார் என்பதை தங்களின் மேலான பார்வைக்கு கொண்டு வருகிறேன். மேற்படி கையாடல் செயல்களுக்கு மேற்படி பேரூராட்சியின் தலைமை எழுத்தர் இராதாகிருஷ்ணன் என்பவர் உடந்தையாகவும் உறுதுணையாகவும் இருந்து வந்துள்ளார்.

மேற்காணும் நேர்வு குறித்து தாங்கள் முறையான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசு பணத்தை கையாடல் செய்துள்ள பொறுப்பு செயல் அலுவலர் திரு. ஆர். குணாளன் தற்போது பெரியகுளம் தென்கரை பேரூராட்சி அலுவலகத்தின் நிரந்தர செயல் அலுவலராக பொறுப்பு வகித்து வருவதோடு, கடந்த 20 ஆண்டு காலமாக தேனி மாவட்டத்திற்குட்பட்ட பேரூராட்சிகளிலேயே பணியாற்றி வருகிறார். மேலும் தற்போது சுமார் 2 கோடி ரூபாய்க்கு தேனி சிவாஜி நகரில் சொந்த வீடு கட்டியுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

ஆகவே சமூகம் அவர்கள், மேற்கண்ட பொறுப்பு செயல் அலுவலரும் தற்போதைய பெரியகுளம் தென்கரை நிரந்தர செயல் அலுவலருமான திரு. ஆர். குணாளன் அவர்கள் மீதும், இவருக்கு உடந்தையாக இருந்துள்ள கெங்குவார்பட்டி பேரூராட்சி தலைமை எழுத்தர் இராதாகிருஷ்ணன் என்பவர் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் நலன் கருதி பணிந்து வேண்டிக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 10.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 24.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரரான திரு. U. சிவராமகிருஷ்ணன் என்பவர் தனது 03.03.2026 நாளிட்ட கடிதத்தில் தனக்கு தற்போது கோவை மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால் வெகுதொலைவு பயணம் செய்யக் கூடாது என மருத்துவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர் என தெரிவித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.03.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

5. எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 10.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கெங்குவார்பட்டி பேரூராட்சியின் பொறுப்பு செயல் அலுவலராக கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 வரை இருந்த ஆர். குணாளன் என்பவர் பணிபுரிந்த காலத்தில் பேரூராட்சிக்கு வாங்கிய தரமற்ற பொருட்களுக்கு லட்சக்கணக்கில் பணம் மோசடி செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

- திரு. குணாளன், முன்னாள் செயல் அலுவலர், கெங்குவார்பட்டி பேரூராட்சியில் பணிபுரிந்த காலத்தில் 473 முதல் 513 வரையுள்ள 41 செலவு சீட்டுகள் மன்ற அனுமதியுடன் செலவு செய்யப்பட்டுள்ளது.

- பொறுப்பு செயல் அலுவலராக கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 பணிபுரிந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு பொதுமக்களின் தேவைகளான அத்தியாவசிய பணிகளான குடிநீர், தெருவிளக்கு மற்றும் பொதுசுகாதார பணிகளுக்கு

செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து செலவினங்களுக்கும் பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் மேற்காணும் காலத்திற்கான தணிக்கை இதுவரை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன், என தெரிவித்துள்ளார்.

6. மேலும் கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 10.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு தனது 06.03.2026 நாளிட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதில் -

"கெங்குவார்பட்டி பேரூராட்சியின் பொறுப்பு செயல் அலுவலராக கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 வரை இருந்த ஆர். குணாளன் என்பவர் பணிபுரிந்த காலத்தில் பேரூராட்சிக்கு வாங்கிய தரமற்ற பொருட்களுக்கு இலட்சக்கணக்கில் பணம் மோசடி செய்துள்ளது சம்பந்தமாக அவர் மீது விசாரணை செய்து கிரிமினல் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பேரூராட்சி அலுவலக கடிதத்தின்படி திரு. U. சிவராமகிருஷ்ணன், ஜி. கல்லுப்பட்டி என்பவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் பதிவு அஞ்சல் ஒப்புகை நகல் பெறப்பட்டுள்ளது. பொறுப்பு செயல் அலுவலராக கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 பணிபுரிந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு பொதுமக்களின் தேவைகளான அத்தியாவசிய பணிகளான குடிநீர், தெருவிளக்கு மற்றும் பொதுசுகாதார பணிகளுக்கு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் செலவிடப்பட்ட அனைத்து செலவினங்கள் பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு மற்றும் கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. U. சிவராமகிருஷ்ணன் என்பவர் தனது புகார் மனுவில் கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சியில் 24.10.2024 முதல் 14.11.2024 வரை தரமற்ற மோட்டார் சாமான்கள் குடிநீர் பராமரிப்பு சாமான்கள், தெருவிளக்கு உதிரிசாமான்கள் கொள்முதல் செய்யப்பட்டதிலும் மற்றும் நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதிலும் அப்போதைய பொறுப்பு பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடுகள் செய்துள்ளார். இதனால் பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மேற்காணும் புகார் தொடர்பாக எதிர்மனுதாரரான கெங்குவார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், கடந்த 24.10.2024 முதல் 14.11.2024 வரை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டும், பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை கருத்திற்கொண்டும் மேற்கொள்ளப்பட்டன எனவும், இச்செலவினங்களுக்கு பேரூராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் மேலே தெரிவிக்கப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு இதுவரை தணிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில் 2024-25ஆம் ஆண்டில் கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவினங்கள் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை மேற்கொள்ளும் போது இப்பேரூராட்சியில் 24.10.2024 முதல் 14.11.2024 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட

அனைத்து செலவினங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இச்செலவினங்களில் நிதியிழப்பு ஏதும் ஏற்பபட்டுள்ளதா என்பது குறித்து உரிய தணிக்கை மேற்கொண்டு, அதன் அறிக்கையை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. U. சிவராமகிருஷ்ணன்,
   ஜி. கல்லுப்பட்டி அஞ்சல்,
   பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம் 625 203.
2. செயல் அலுவலர்,
   கெங்குவார்பட்டி முதல்நிலை பேரூராட்சி,
   தேனி மாவட்டம்.
3. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
   571. அண்ணாசாலை, நந்தனம், சென்னை – 600 035.
4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/4/26

செயலாளர்
13/4/26